RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1628

# சங்க இலக்கியங்கள் வழி அறியலாகும் பண்டைய தமிழரின் நம்பிக்கைகளும் சகுனங்களும்

**கே. ஹேமலதா [அ, *]**

[அ] தமிழ்த்துறை, பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்-636011, தமிழ்நாடு, இந்தியா

# Sangam Literature as a way to Know Ancient Tamil Beliefs and Omens

**K. Hemalatha [a, *]**

[a] Department of Tamil, Padmavani Arts & Science College for Women, Salem-636011, Tamil Nadu, India

* Corresponding Author: khemalathamaha@gmail.com

Received: 05-07-2022
Revised: 28-09-2022
Accepted: 13-10-2022
Published: 12-12-2022

Check for updates

**ABSTRACT**

Folklore is the culture of particular people protected by their beliefs and customs. Beliefs are created and protected by a community of people. Man's selfishness and social consequences are developing these beliefs. Beliefs often seem to be the basis of fear, but when we do not perceive supernatural activities and when we are unable to explain the reasons for some events in life. Our mind creates some reason for it. And these reasons become a kind of belief. Beliefs are passed down from one generation to another. From birth to death we see man having various kind of beliefs. Beliefs play a major role in human life and it drives human life. This article examines the beliefs and omens of the ancient Tamils through Sangam Literature.

**Keywords:** Belief, Superstition, Individual Belief, Society Belief.

## முன்னுரை

மனித மனத்தின் விளைவாக நம்பிக்கைகள் தோன்றுகின்றன. மனிதன் அச்சத்தின் காரணமாக இயற்கையின் தோற்றத்தினையும், செயல்பாடுகளையும் தனது வாழ்வோடு இணைத்து நோக்கிய நிலையில் நம்பிக்கைகள் தோற்றம் கொண்டன. மனித வாழ்வில், நம்பிக்கைகள் என்று தோன்றின என்று திட்டவட்டமாகக் கூறமுடியாது எனினும் மக்களின் நடைமுறை வாழ்வில் இந்நம்பிக்கைகள் தொடர்ந்து வருவதைக் கூர்ந்து நோக்கினால் இதனைச் சமுதாயப் பண்பாட்டின் உணர்ச்சிக் கூறுகளின் தொகுதி எனக் கூறலாம்.

காரண காரியத் தொடர்புகளுக்கு உட்பட்டுச் சான்றுகளின் வாயிலாக நிறுவ முடிவதை நம்பிக்கை என்றும், சான்றுகளின் அடிப்படையிலோ காரண காரியத் தொடர்பின் வாயிலாகவோ விளக்க முடியாதவற்றை மூடநம்பிக்கை என்றும் வகைப்படுத்துவர். மனித வாழ்வில் காணப்படும் நம்பிக்கைகளுக்குக் காரணம் அறிய முடியவில்லை என்றாலும் மனித சமுதாயம் நம்பிக்கை வயப்பட்டுச் செயல்படுவதை காணமுடிகிறது. ஒரு சமுதாயத்திடம் காணப்படும் நம்பிக்கைகளைக் கொண்டு அச்சமுதாயத்தினைப் பற்றி அறியமுடிகின்றது. தனிமனித நம்பிக்கை காலப்போக்கில் சமுதாய நம்பிக்கையாக மாற்றம் அடைகின்றது.

## நம்பிக்கைகளின் தோற்றம்

மனித வாழ்க்கைப் பயணம் நம்பிக்கையின் துணை கொண்டே நடைபெறுகிறது. நம்பிக்கை என்பது ஒன்றை உண்மையென ஏற்றுக் கொள்வதாகும். மனிதனின் தன்னல உணர்வும் சமுதாய உணர்வுமே நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன. நாட்டுப்புற மக்களிடையே பல்வேறான நம்பிக்கைகள் பல்கிக் கிடக்கின்றன. மனிதனின் வாழ்வியல் நிகழ்ச்சிகளுக்கும் நம்பிக்கைள் காரணமாக அமைகின்றன.

நம்பிக்கைகள் என்று தோன்றின என்பதை யாராலும் கண்டறிந்து கூற இயலாத அளவிற்கு மிகவும் தொன்மையானதும், மரபு வழிப்பட்டதுமாகும். இன்றைய நாகரிக மனிதனிடம் காணப்படும் பல நம்பிக்கைகள் நாகரிகமற்ற பழங்குடி மக்களிடமும் காணப்படுகின்றன. எனவே ஒரு நம்பிக்கை என்று தோன்றியது என வரையறுப்பது இயலாத ஒன்றாகும். மனிதனின் அச்சம், அவா, தன்னலக் காப்புணர்வு என்பவைகளே நம்பிக்கைகளின் தோற்றத்திற்குக் காரணங்களாக உள்ளன என அறியலாம்.

## நம்பிக்கைகள் குறித்து அறிஞர்களின் கருத்துகள்

நாட்டுப்புற நம்பிக்கை நாட்டுப்புறவியலின் அடிப்படைப் பொதுக்கூறு எனப்படும். மக்களின் அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், சட்டம், வழக்கம் முதலியவைதாம் பண்பாடாக மலர்கின்றன என்கிறார் மானிடவியல் பேரறிஞர் டெய்லர். வாழ்க்கை முறைகளின் கூட்டுச் சேர்க்கை பண்பாடு என்கிறார் மாலினோவஸ்கி பண்பாட்டினை வாழ்க்கையின் முறையாகக் கருதினால் மனிதனின் நம்பிக்கைகள் பழக்கவழக்கங்கள், சடங்குகள் போன்றவை இதற்குள் அடங்கிவிடுகின்றன. “பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளும் மக்களின் தேவைகளின் அடிப்படையிலேயே தோன்றியவையாகும். நம்பிக்கைகளும், பழக்கவழக்கங்களும் பண்பாட்டு வளர்ச்சியின் படிக்கற்கள் எனவும் மேலும் அறிவு நிலைக்கு அப்பாற்பட்ட எண்ணங்களையே நம்பிக்கைகள் என்று சு. சக்திவேல் கூறுகிறார்” (Sakthivel, 2010).

“கண்ணால் பார்க்காமலும், அறிவாராய்ச்சி செய்யாமலும் சில செய்திகள் காரண காரியம் கருதாமல் அவ்வாறே ஏற்றுக் கொள்ளப்பட்டுச் செயலாற்றுகின்றன. முன்னோர் வழங்கியதை அப்படியே ஏற்றுக் கொள்வர். ஏன்? எதற்கு? என்ற வினாக்கள் எழுப்பப்படுவதில்லை அவை உண்மையா? கட்டுக்கதையா? எனக் கருதிப் பார்க்கப்படுவதில்லை. இயற்கையில் ஏற்படும் எதிர்பாரா நிகழ்ச்சிகளுக்கு எல்லாம் கருத்துகள் கற்பித்து அப்படியே நம்பப்படும் இவற்றை நம்பிக்கைகள்” என்பர் என்று தமிழ்நாட்டு வரலாறு என்ற நூல் விளக்கமளிக்கிறது (Rajendran, 2007).

## பண்டைத் தமிழரின் நம்பிக்கைகளும், சகுனங்களும்

சகுனம் பார்க்கும் நம்பிக்கை உலகெங்கிலும் காணப்படுகின்றது. பண்டைத்தமிழர் இதனைப் புள், நிமித்தம் ஆகிய சொற்களால் குறிப்பிடுகின்றனர். தொல்காப்பியத்தில் “நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்” (தொல். பொருள். 91) என நாள் நிமித்தமும், புள் நிமித்தமும் சுட்டப்படுகின்றது.

நிமித்தம் என்பது வாழ்வில் நிகழவிருக்கும் நன்மை, தீமைகளைச் சில குறியீடுகளின் வாயிலாக உணர்த்துவதாகும். நிமித்தங்கள் அனைத்தும் நம்பிக்கையைச் சார்ந்தனவாக உள்ளன. நிமித்தங்களை, நற்செயலையும், நற்பயனையும் அறிவிக்கும் குறியீட்டினை நன்னிமித்தம் என்றும், தீய செயலையும், தீமையையும் தெரிவிக்கும் குறியீட்டினை தீ நிமித்தம் என்றும் அவற்றின் செயற்பாடு விளைவு கருதி இரு வகையாகப் பகுக்கலாம். இதனை நாட்டுப்புற வழக்கில் நல்ல சகுனம், தீய சகுனம் என்று குறிப்பிடுவர். ஒரு செயலைத் தொடங்கும்போது நல்ல சகுனம் தோன்றினால் அச்செயல் நன்மையாக முடியும் என்றும், தீய சகுனம் தோன்றினால் அச்செயல் தோல்வியடையும் என்றும் நம்புகின்றனர்.

## நல்ல நாள் நேரம் பார்த்தல்

ஒரு செயலை நல்ல நாளில் செய்யத் தொடங்கினால் எவ்விதத் தடங்கலின்றி நன்றாக முடியும் என்று மக்கள் நம்புகின்றனர். மன்னர்கள் போர் தொடங்குவதற்கு நல்ல நாள் பார்த்தனர். நல்ல நேரத்தை முழுத்தம் என்று குறிப்பிட்டனர். இம்முழுத்தத்தை இன்று முகூர்த்தம் என்று கூறுகிறோம். போர் தொடங்கும் முன்னர் நல்ல நாள் குறித்து அந்நாளில் வெண்கொற்றக் குடையையும், வாளையும் செல்ல வேண்டிய திசையில் எடுத்துச் சென்றனர். இதனை வாள்நாள்கோள், குடைநாள்கோள் எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

மன்னனைக் காணப் போகும்போது இரவலர்கள் நல்லநாள், நல்ல நிமித்தம் (சகுனம்) பார்த்துச் செல்வர். அவ்வாறு சென்றால் நிறையப் பரிசில்கள் கிடைக்கும் என்று அவர்கள் நம்பினர். நாளும், சகுனமும் சரியில்லை எனில் அவர்கள் மன்னனைக் காண்பதற்குச் செல்ல மாட்டார்கள். இதனை

“நாள் அன்று போகி, புள் இடை தட்ப

பீடு கெழு மலையன் பாடியோரே”

என்ற புறநானூற்றுப் பாடல் எடுத்துரைக்கின்றது (Somasundaranar, 2007).

விதை விதைக்கும் போதும் மக்கள் நல்லநாள் பார்த்தே விதை விதைப்பர். நல்லநாளில் விதை விதைத்தால் நன்கு விளைச்சல் பெருகும் என்று மக்கள் நம்பினர். பன்றி உழுத புழுதியில் குறவர் நல்ல நாள் பார்த்து திணையை விதைத்ததையும், விளைந்த தானியத்தை உண்பதற்கு நல்ல நாள் பார்த்தனர். நல்ல நாளில் உண்டால் எந்தவிதமான தீங்கும் நேராது என்றும் மக்கள் நம்பினர். மக்களின் இந்நம்பிக்கையினை,

“கொழுங் கிழங்கு மிளிரக் கிண்டி, கிளையொடு

முந்து விளை யாணர் நாள் புதிது உண்மார்”

என்ற பாடல் தெளிவுறுத்துகிறது (Somasundaranar, 2007).

மன்னர்கள் போருக்குச் செல்லும்போது நல்ல சகுனங்களைப் பார்த்தே புறப்பட்டனர். எட்டுத் திசைகளிலும் எரிகொள்ளி எரிந்து விழுதல், பெரிய மரத்தின் இலையில்லாத கிளை உலர்ந்து போதல், ஞாயிறு பல இடங்களிலே செறிந்து தோன்றுதல், அச்சம் தரும் பறவைகள் ஓசை எழுப்புதல், ஆகியவை நனவில் தீய சகுனங்களாகும். இத்தகைய பெரிய தீய சகுனங்கள் ஏற்படுகின்றனவா என்று பார்த்து அவ்வாறு ஏற்பட்டால் அதன் உட்பொருளை அறிந்த பின்னர் போருக்குச் சென்றனர். இச்சகுனம் பற்றிய மக்களின் நம்பிக்கையை,

“திசை இரு நான்கும் உற்கம் உற்கவும்

அஞ்சவரத் தகுந புள்ளுக் குரல் இயம்பவும்”

என்ற கோவூர்கிழாரின் பாடல் தெளிவுறுத்துகிறது (Somasundaranar, 2007). இன்றும் பயணத்தின் போது சகுனம் பார்த்துச் செல்லும் பழக்கம் மக்களிடையே இருந்து வருவது நோக்கத்தக்கது. இது பழக்கம் பற்றிய நம்பிக்கையாக அமைந்துள்ளது.

## தலையை விரித்துப் போடுதல்

பயணம் செய்யும் போது எதிரில் தலையை விரித்துப் போட்டுக் கொண்டு வருவது தீய சகுனமாகக் கருதப்பட்டது. அவ்வாறு வந்தால் உயிருக்குத் தீங்கு நேரும் என்று மக்கள் கருதினர். அவ்வாறு வந்துவிட்டால் அத்தீங்கினின்று தப்புவதற்காக உடனே கடவுளை வணங்கினர். இதனை,

“தளரு நெஞ்சத் தலைஇ மனையோள்

கள்ளி நீழற் கடவுள் வாழ்த்தி”

என்ற புறநானூற்றுப் பாடல் தெளிவுறுத்துகின்றது வழிச் செல்வோர் எதிரே, விரித்த தலைமயிருடன் ஒருத்தி வந்தாள் (Somasundaranar, 2007). அதனை தீ நிமித்தமாகக் கருதி அவர்கள் கள்ளியின் நிழலில் இருந்த தெய்வத்தை வணங்கினர். இத்தகைய சகுனம் குறித்த நம்பிக்கை இன்றும் மக்களிடையே நிலவி வருவதைக் காணலாம்.

## பறவை நிமித்தம்

சில பறவைகள் பறப்பதும் சிலவகையான பறவைகள் அலறுவதும் தீயதை ஏற்படுத்தும் சகுனங்களாக மக்களால் கருதப்பட்டன. இச்சகுனங்கள் மக்களிடத்தில் காணப்படும் பல்வேறு விதமான நம்பிக்கைகளை எடுத்துரைக்கின்றன.

ஆந்தை அலறினால் தீயது நடக்கும் என்ற இந்நம்பிக்கை புறநானூற்றில், "அஞ்சுவரு குராஅல் குரலுந் தூற்றும்" (சோமசுந்தரனார், 2007) என்று இடம்பெற்றுள்ளது. ஆந்தை அலறுவதைத் தீ நிமித்தம் எனறு மக்கள் நம்பினர். இதனை புறநானூற்றின் 40 ஆவது பாடல் குறிப்பிடுகின்றது. சிற்சில பறவை விலங்குகளின் காட்சியும், அவற்றின் குரல்களும் நன்மை தீமைகளைத் தெளிவுறுத்தும் என்று மக்கள் நம்பினர். வல்வில் ஓரியைக் கழைதின் யானையார் பாடிச் சென்ற போது பரிசில் அவருக்குக் கிடைக்கவில்லை. அதற்காகப் புலவர் ஓரியைப் பழிக்கவில்லை. மாறாக,

"புள்ளும் பொழுதும் பழித்தல் அல்லதை
உள்ளி வருநர் பழியலர் அதனால்
புலவேன் வாழியர் ஓரி"

என்று தான் புறப்பட்ட நேரத்தையும், எதிர்ப்பட்ட புள்ளையும் நோவது தவிர மன்னனை நோவது பயனற்றது என்று குறிப்பிடுகின்றார் (Somasundaranar, 2007).

## காக்கை நிமித்தம்

காக்கை கரைந்தால் விருந்தினர் வந்திடுவர் என்பது நம்பிக்கை ஆகும். இந்நம்பிக்கை சங்ககாலத்திலும் இருந்துள்ளது. பொருளின் காரணமாகத் தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் விரைந்து வராததால் தலைவி மிகவும் கவலைப்படுகிறாள். அப்பொழுது காக்கையானது கரைகிறது. ஆதலால் தலைவன் விரைந்து வருவான் என்று தோழி, தலைவியை ஆற்றுவிப்பதாக கீழ்கண்ட பாடல் அமைகிறது. இதனை,

"பெருந்தோள் நெகிழ்த்த செல்லற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே"

என்னும் காக்கைப்பாடினியார் நச்செள்ளையாரின் அடிகள் தெளிவாக்குகின்றன (Puliyurkesigan, 2012). காக்கையின் இயல்பினைப் பாடி உள்ளதால் இவருக்கு இப்பெயர் அமைந்ததாகவும் கூறப்படுகின்றது.

"மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை
அன்புடை மரபினின் கிளையோ டார"

என்ற மற்றொரு குறுந்தொகைப் பாடலிலும் காகம் கத்தினால் விருந்தினர் வருவர் என்ற பண்டைய தமிழரின் நம்பிக்கை வெளிப்படுவதைக் காணமுடிகிறது (Puliyurkesigan, 2012).

பண்டைய காலத்தில் காட்டிடையே மக்கள் செல்லும் போது ஆறலைக் கள்வர் மிகுந்த தொல்லைக் கொடுத்துக் கொண்டே இருப்பர். ஆறலைக் கள்வர் நடமாட்டத்தைக் கணத்துள் என்ற பறவை சத்தம் எழுப்பி மற்றவர்கட்கு எச்சரிக்கை விடுத்த செய்தியையும் சங்க இலக்கியத்தில் காண்கிறோம்.

“ஆற்றய லிருந்த இருந்தோட் டஞ்சிறை

நெடுங்காற் கணத்துள் ஆளறி வுறீஇ

ஆறுசெல் வம்பலர் படைதலை பெயர்க்கும்”

என்ற பாடலிலிருந்து கணந்துள் பறவையைப் பற்றிய செய்தியை அறியமுடிகிறது (Puliyurkesigan, 2012).

## விலங்கு நிமித்தம்

சங்ககாலத்தில் ஓந்தி நிமித்தமும், பல்லி நிமித்தமும் காணப்பட்டது. முற்காலத்தில் அழைக்கப்பட்ட ஓந்தியானது தற்பொழுது ‘ஓணானாக’ மருவி வந்துள்ளது.

சங்ககாலத்தில் ஓந்தியானது வலம்போவது, இடம்போவது இவற்றை வைத்து நன்மை, தீமை என நிமித்தம் குறிக்கப்பட்டுள்ளது என்பதை அள்ளூர் நன்முல்லையார் பாடலின் மூலம் அறியமுடியும். இதனை

“வேதின வெரிநின் ஓதி முதுபோத்து

ஆறுசெல் மாக்கள் புட்கொளப் பொருந்தும்”

என்ற குறுந்தொகை அடிகள் வழி அறியலாம் (Puliyurkesigan, 2012). தலைவன் பொருளீட்டுவதற்காக கொடுமையான பாலை நிலவழி சென்றுள்ளான். பாலை வழியில் செல்பவர்க்கு ஓந்தியைத் தவிர நிமித்தம் பார்க்க வேறு எப்பொருளும் இல்லை. தலைவன் பொருளீட்டும் நோக்கத்துடன் சென்றதால் கொடுமையான பாலைநில வழியை நினைத்து கவலைப்பட மாட்டான். ஆனால் தலைவி தலைவனை நினைத்து உள்ளம் வருந்த உடல் மெலிந்து ஊராரின் பழிச்சொல்லுக்கு ஆளாகி நிற்கின்றாள் என்று அள்ளூர் நன்முல்லையார் பாடியுள்ளார்.

“கானம் வெம்பிய வறம்கூர் கடத்திடை

வேனில் ஓதி முதுபோத்து”

என்ற நற்றிணைப் பாடலும் ஓந்தி வலம் இடமாகச் செல்வதை வைத்து மக்கள் நிமித்தம் பார்த்தனர் என்ற செய்தியை நமக்கு உணர்த்துகிறது (Balasubramanian, 2011). ஆனால் தற்காலத்தில் ஓந்தியைப் பார்ப்பதையே தீய நிமித்தமாகக் கருதுகின்றனர்.

‘பல்லி சொல்லுதல்’ தமிழர்களது வாழ்வின் முக்கிய இடம்பெற்றுள்ளது எனலாம்.

“பகுவாய்ப் பல்லி படுதொறும் பரவி

நல்ல கூறென நடுங்கிப்

புல்லென் மாலையொடு பொருங்கொறானே”

“நெடுஞ்சுவர்ப் பல்லியும் பாங்கிற் றேற்றும்”

என்ற மேற்கண்ட பாடல்வரிகள் பல்லி சொல்லுதலை பண்டைய தமிழர்கள் நிமித்தமாகக் கருதினர் என்பதை உணர்த்துகிறது (Balasubramanian, 2011).

## விரிச்சி கேட்டல்

ஏதேனும் காரியத்திற்குப் புறப்படும்போது நல்ல வார்த்தைக் கேட்பதும் நல்ல சகுனமாகக் கருதப்பட்டது. இந்த நம்பிக்கை இன்றும் நிலவுவதைக் காணலாம். தொல்காப்பியர் இதனைப் ‘பாக்கத்து விரிச்சி’ எனக் குறிப்பிடுகின்றார். இதனை விரிச்சி நிற்றல், வாய்ப்புள், பறவாப்புள், நற்சொல், வாய்ச்சொல் என்றும் வழங்குகின்றனர். இதனை அசரீரி என்றும் கூறுவர்.

முதுசெம்பெண்டிர் நாழியில் நெல்லை எடுத்துச் சென்று, சுளகில் இட்டு, நீரும் பூவும் சொரிந்து விரிச்சி கேட்பர். இதனை முல்லைப்பாட்டு,

"பெரும்பெயல் பொழிந்த சிறுபுன்மாலை

அருங்கடி மூதூர் மருங்கிற் போகி

பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப"

என்று குறிப்பிடுகின்றது (Mohan, 2004).

விரிச்சி கூறும் கட்டுவிச்சியான பெருமுது பெண்கள் குரல் தடுமாறாமல் கூறல் வேண்டும். அவ்வாறு தடுமாறினால் தீயது நிகழும் என்று மக்கள் நம்பினர். புண்பட்ட நிலையில் கிடக்கும் தலைவனின் இறப்பை இது குறிப்பதாக மனைவி அஞ்சுகிறாள். அவளின் நம்பிக்கையை,

"நெல்நீர் எறிந்து விரிச்சி யோர்க்கும்

செம்முது பெண்டின் சொல்லும் நிரம்பா"

என்று புறநானூறு கூறுகின்றது (Somasundaranar, 2007).

## விளக்கு அணைதல்

நல்ல செயல்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் போது விளக்கு அணைதல் கூடாது. அவ்வாறு அணைந்தால் அது தீயதை விளைவிக்கும் என்று மக்கள் நம்பினர். இந்த நம்பிக்கை எல்லோரிடத்திலும் இருப்பது குறிப்பிடத்தக்கது. புறநானூற்றில்,

"நெடுநகர் வரைப்பின் விளக்கும் நில்லா"

என விளக்கு அணைதல் பற்றிய நம்பிக்கை இடம்பெற்றுள்ளது (Somasundaranar, 2007). நீண்ட நகரின் மாளிகையில் ஏற்றி வைத்த விளக்குகளும் அணைந்து விடும். அதனால் போரில் புண்பட்டுக் கிடக்கும் தலைவன் இறந்து படுவான். தலைவன் இறந்து நான் உயிர்வாழ்வது அரிதினும் அரிதாகும் என்று மனைவி கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. இன்றும் ஏற்றிய விளக்கு அணைவது தீயதை உணர்த்தும் சகுனமாக மக்களால் நம்பப்படுகின்றது.

## கனவு பற்றிய நம்பிக்கை

நாட்டுப்புற மக்கள் கனவுகள், வாழ்வில் பின் நிகழப்போவதை முன்னரே உணர்த்துகின்றன என்று நம்புகின்றனர். கனவுகளையே நல்லகனவு, கெட்ட கனவு என்று இரு வகையாகப் பிரிப்பர். மேலும் நன்மையோ, தீமையோ வருவது கனவு மூலம் தெரிந்து விடும் என்று நம்புகின்றனர். கனவு பற்றிய செய்திகள் சங்ககாலத் தமிழ் இலக்கியங்களிலும் இடம்பெற்றுள்ளன. பின்னிகழ்வுகளை முன்கூட்டியே அறிவிப்பது கனவு என்பர்.

எல்லா மக்களிடமும் கனவு குறித்த நம்பிக்கை இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு கனவிற்கும் ஒவ்வொரு விதமான பலன் உண்டு. பகற்கனவு பலிக்காது என்பர். அதிகாலையில் காணும் கனவு பலிக்கும் என்பர்.

சோழன் குளமுற்றுத்துத் துஞ்சிய கிள்ளிவளவனின் பகைவர்கள் இருநான்கு திசைகளிலும் உற்கம் உற்கவும், வற்றல் மரம் தீப்பற்றி எரியவும், ஞாயிறு பலவாகத் தோன்றவும், அஞ்சத்தக்க பறவைகள் ஆரவாரிக்கவும், பல் கழன்று விழவும், தலையில் எண்ணெய் ஊற்றவும், கோட்டு மாவூரவும், படைக்கருவிகள் கட்டிலொடு சாயவும் கனவு கண்டு தங்களுக்கு ஏற்படப் போகும் அழிவைக் குறித்து,

"எயிறு நிலத்து விழவும் எண்ணெய் ஆடவும்

மையல் கொண்ட ஏமம் இல் இருக்கையர்"

என்று அஞ்சியதாக புறநானூறு குறிப்பிடுகிறது.

மேலும் சிலம்பில் கண்ணகி கண்ட கனவு, கோவலன் கண்ட கனவு, கோப்பெருந்தேவி கண்ட கனவு பற்றி விவரிப்பதுடன் கனவுகள் பற்றிய நம்பிக்கைகளும் பேசப்படுகின்றன. தமிழில் 'கனாநூல்' என்ற தனி நூலில் கனவு பற்றிய நம்பிக்கைகள் முழுமையாக இடம்பெற்றுள்ளன (Somasundaranar, 2007).

## கண் துடித்தல்

மனித உடலுறுப்புகளின் அசைவினைக் கொண்டு சில நம்பிக்கைகள் அக்கால மக்களிடையே இருந்து வந்துள்ளன. அதில் ஒன்றாக கண்துடித்தல் பற்றிய நம்பிக்கையைக் காண்கிறோம். உடம்பிலுள்ள ஒரு பகுதி துடிப்பது முதலியவற்றைக் கொண்டு எதிர் காலத்தைக் கணிப்பதும் உண்டு. இடது கண் துடிப்பது பெண்களுக்கு நல்லது என எட்கர் தெர்ஸ்டன் கூறுகிறார். தலைவனை எதிர்நோக்கும் தலைவிக்குக் கண் துடித்தால், தலைவன் விரைவில் வருவான் என நம்புகிறாள்.

"நல்லெழி ஒண்கணு மாடுமா விடனே"

"நுண்ணேர் புருவத்த கண்ணு மாடும்"

என்றும் சுட்டிக்காட்டி இடது கண் துடித்தல் நல்லது, அவை பண்டைய காலத்தில் நன்னிமித்தமாக கருதப்பட்டதனை மேற்கண்ட பாடல்கள் உணர்த்துகின்றன. பெண்களின் வலது கண் துடிப்பதால் தீமை விளையும் என்பதனை இளங்கோவடிகள் சிலம்பில் இந்திரவிழாவின் போது மாதவியின் வலக்கண் துடித்தது. அதனால் கோவலன் அவளைப் பிரிந்தான் என்பதாகச் சுட்டுகிறார் (Balasubramanian, 2011).

"கண்ணகி கருங்கணும் மாதவி செங்கணும்

உண்ணிறை கரந்தகத் தொளித்து நீருகுத்தன

எண்ணுமுறை இடத்தினும் வலத்தினும் துடித்தன"

என்று சிலம்பும் கூறுகின்றது (Balasubramanian, 2011).

## கூடலிழைத்தல்

பெண்களிடையே கூடலிழைத்தல் இருந்தது. காதலன் வருகையை நினைத்துக் காதலி மணலில் விரலால் வட்டமிடுவாள். வட்டத்தின் இரு முனைகளும் நேராகச் சந்தித்தால் நல்ல அறிகுறி என்றும், அப்படி இல்லாவிட்டால் நல்ல அறிகுறி இல்லை என்றும் சங்ககால மக்கள் நம்பினர் (Balasubramanian, 2011).

## குறிபார்த்தல்

எதிர்காலத்தைக் குறி சொல்லுபவர் மூலம் அறிந்துக் கொண்டார்கள் தமிழர்கள். குறி சொல்லும் பெண்களைக் 'கட்டுவிச்சி' என்றும் 'அகவன்மகள்' என்றும், குறி சொல்வோனை 'வேலன்' என்றும் குறிப்பிட்டனர். குறி கேட்கும் நம்பிக்கையுள்ள மக்களை அன்று மட்டுமல்ல இன்றும் கிராமப்புறங்களில் காண்கிறோம்.

தலைவி தலைவனைக் காண இயலாத போது, பசலை படர்ந்து, மேனி மெலிந்து உண்ணாமல், உறங்காமல் துன்பப்படுவாள். தலைவியின் மேனியின் மெலிவின் காரணத்தை அறியாத தாயார், அதனை அறிய விரும்பி கட்டுவிச்சியை அழைத்து கட்டுப்பார்ப்பது வழக்கம். கட்டுவிச்சி முறத்தில் நெல்லையிட்டு எண்ணி அதனால் புலப்படும் நிமித்தங்களை அறிந்து குறி கூறுவாள். இவர்கள் தெய்வம் ஏறி குறி கூறுதலும் உண்டு.

"அகவன் மகளே அகவன் மகளே

நல்நெடுங் குன்றம் பாடிய பாட்டே"

இங்கு தோழி கட்டுவிச்சியிடம் தலைவனின் குன்றைப் பற்றி பலமுறை திரும்பத் திரும்ப பாடும்படி கூறுகின்றாள் (Puliyurkesigan, 2012). ஏனெனில் செவிலித்தாயின் உள்ளத்தில் ஐயத்தைத் தோற்றுவித்து அறத்தொடு நிற்றல் தோழியின் நோக்கமாகும். மேற்கண்ட குறுந்தொகைப் பாடலின் மூலம் குறிபார்க்கும் வழக்கம் சங்ககால மக்களிடம் இருந்தது என்பதை அறியமுடிகிறது.

## முடிவுரை

பண்டைத் தமிழர் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினர் என்பதும் பறவை, விலங்குகளின் நடத்தைகளைக் கண்டுணர்ந்தனர் என்பதும் சங்க இலக்கியங்கள் மூலம் அறிகிறோம். எனவே நம்பிக்கை என்பது பன்னெடுங்காலமாக மக்கள் வாழ்விலே இருந்து வந்துள்ளதை நாம் அறிகிறோம். நம்பிக்கைகள் எழக் காரணமாயிருந்த நிகழ்ச்சிகள் உண்மையாகவோ, பொய்யாகவோ இருக்கலாம். ஆனால் நம்பிக்கை இருப்பது உண்மை. அவை மெய்ப்பிக்கத் தக்கவை. அந்த அடிப்படையில் நம்பிக்கைகளை ஆராய வேண்டும். காக்கை கரைந்தால் விருந்தினர் வருவர் என்ற நம்பிக்கையானது அக்காலம் தொடங்கி இக்காலம் வரையில் காணப்படுகிறது. சங்ககாலத்தில் ஓந்தி வலம் போவது, இடம் போவதை வைத்து நிமித்தம் பார்த்துள்ளனர். இக்காலத்தில் ஓந்தியைப் பார்ப்பதையே தீய நிமித்தமாகக் கருதுகின்றனர். சங்ககால மக்களிடம் குறிபார்க்கும் வழக்கம் இருந்துள்ளது. அதுவே தற்காலத்தில் வளர்ந்து சோதிடம் பார்க்கும் பழக்கமாக மாறி உள்ளது. மேலே கூறப்பட்டுள்ள நம்பிக்கைகள் இன்றளவும் நம்மால் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. இவை மனித வாழ்வில் வேரூன்றிக் காணப்படுகின்றன என்பதும் நாம் அறிந்ததே. நாகரிகம், பண்பாடு ஆகியவை மனிதனை மாற்றியிருந்தாலும் நம்பிக்கையால் பின்னப்பட்ட அவனது மனதை மாற்ற முடியாது என்பதையும் நாம் அறியலாம். நாட்டுப்புற மக்களின் வாழ்வோடு ஒன்றிணைந்துள்ள நம்பிக்கைகள் அவர்களைப் பாதுகாக்கின்றன. அவர்களின் வாழ்வை வழி நடத்துகின்றன. அவர்களுக்கு மனஉளைச்சல் ஏற்படும் போதெல்லாம் தக்க மருந்தாய்ச் செயல்படுகின்றன. இன்றைய நவீன நாகரிகம் நாட்டுப்புற மக்களின் வாழ்க்கை முறையை பல வகையில் மாற்றியமைத்தாலும் மரபு ரீதியான சடங்கு முறைகளையும், நம்பிக்கைகளையும் இன்றளவும் மக்கள் பின்பற்றி வருகின்றனர். இது மக்களுக்காக மக்கள் ஏற்றுக் கொண்ட நம்பிக்கைகள், ஆகும். மனிதனுக்கு இறப்புண்டு. நம்பிக்கைகளுக்கு இறப்பில்லை.

## References

Balasubramanian, K.V. (2004) Sanga Ilakkiyam, New Century Book House, Chennai, India.

Balasubramanian, K.V. (2011) Nattrinai, New Century Book House, Chennai, India.

Ilampuranar, (2005) Tholkappiyam, Saradha Pathippagam, Chennai, India.

Mohan, R. (2004) Mulaipattu, New Century Book House, Chennai, India.

Puliyurkesigan, (2012) Kurunthogai, Saradha Pathippagam, Chennai, India.

Rajendran, S. (2007) Nattupurap Panpattu Palakavangal, Tamil university, Thanjavur, India.

Sakthivel, S. (2010) Naattuppura Eyal Aaivu, Manivasagar publications, Chennai, India.

Somasundaranar, P.V. (2007) Purananuru, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India.

Venkatasami nattar, N.M. (2008) Silappathikaram, Ramaiya Pathipagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License